2015 பிப்ரவரி 18]

என்பது இன்றியமையாதத் தொழிலாக இருக்கிறது. உலகம் கிராமத்தைச் சுற்றி 5,000-க்கும் மேற்பட்ட கால்நடை அலகுகள் இருக்கின்றன.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. டி. செங்குட்டுவன்: கால்நடைகளுக்குக் கோமாரி நோய் உள்ளிட்ட நோய்கள் வருகின்றபோது, உலகம் கிராமத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தூரமுள்ள இராயக்கோட்டைக்கோ அல்லது 20 கிலோ மீட்டர் தூரமுள்ள உத்தனப்பள்ளிக்கோ செல்ல வேண்டியிருக்கிறது. அதேபோல, ராமன்தொட்டியிலிருந்து 25 கிலோ மீட்டர் தூரமுள்ள பேரிகை, அத்திமுகம், சூளகிரி பகுதிகளிலுள்ள கால்நடைக் கிளை நிலையங்களுக்குத்தான் செல்ல வேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருக்கிறது. கால்நடை மருத்துவ அலுவலர்களும் உடனடியாக வந்து சிகிச்சை அளிக்கக்கூடிய வசதிகள் இல்லை. ஆதலால், கால்நடை வளர்ப்பையே நம்பியுள்ள அந்தப் பகுதியிலுள்ள கிராம மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். ஆகவே, மேற்படி உலகம், உங்கட்டி, ராமன்தொட்டி கிராமங்களில் கால்நடை மருத்துவமனைகளை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். உலகம் மற்றும் ராமன்தொட்டி கிராமங்களிலே துறைரீதியாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அங்கே கால்நடை மருந்தகங்கள் அமைக்கக்கூடிய அளவிற்குச் சாத்தியக்கூறுகள் உள்ளன. மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற அரசின் மூலமாக, வருகின்ற நிதியாண்டிலே மருந்தகம் அமைக்கின்ற திட்டம் அரசின் செயற்குறிப்பிலே இடம்பெறும்போது, உலகம் மற்றும் ராமன்தொட்டி கிராமங்களில் கால்நடை மருந்தகம் அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 பிப்ரவரி 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலே 5,276 கால்நடை அலகுகளும், ராமன்தொட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் 5,276 கால்நடை அலகுகளும் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டு, வருகிற காலத்திலே அதற்குண்டான பணிகளைச் செய்து தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இரண்டு கிராமங்களிலும் கால்நடை மருத்துவமனைகளையும், கால்நடை மருந்தகங்களையும் இந்த நிதியாண்டிலேயே உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

11—

விசைத்தறிப் பூங்கா

***51123—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆர்.கே. பேட்டையில் விசைத்தறிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2015 பிப்ரவரி 18]

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான்; மக்களுக்காக நான்' என்று பல்வேறு திட்டங்களை மக்களுக்கு வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்றென்றும் ஸ்ரீரங்கம் தொகுதி மக்களின் இதயங்களிலே உள்ளார்கள் என்பதை நிரூபித்துக் காட்டி, இமாலய வெற்றியைக் கழகத்தின் வெற்றியாகத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்றென்றும் தமிழகத்திலே மக்களின் முதல்வர் அம்மா அவர்கள்தான் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கக்கூடிய ஸ்ரீரங்கம் தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, எனது பதிலினை அளிக்கிறேன்.

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆர்.கே. பேட்டையில், விசைத்தறிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டையில், விசைத்தறிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், அப்பகுதியிலேயுள்ள தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், நடைமுறையிலுள்ள ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்படி, இப்பகுதியில் விசைத்தறிப் பூங்கா மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் சோதனையில் சில நாட்கள் இருந்தபோது, 10 கோடி தமிழர்களின் உளமார்ந்த பிரார்த்தனை, ஆலயங்களில், தர்காக்களில், தேவாலயங்களில் மனமுருகி வேண்டிய மக்களின் வழிபாடு, மாணவரும், மீனவரும், உழவரும், உழைப்பாளியும் ஒன்றுகூடி நடத்திய கூட்டுப் பிரார்த்தனை, ஆலயங்கள்தோறும் ஆராதனை, அர்ச்சனைகள், உயிரையும் தந்திட்ட தியாகங்கள், கடலுக்கும், கழனிக்கும் செல்லாது கண்ணீர் வடித்து நின்ற உழைப்பாளிகள்,